UNFPA

பிப்ரவரி, 2018

# பெண்கள் மற்றும் சிறுமியரின் இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களை இலங்கைப்பத்திரிகைகள் பிரசுரித்தல்

## பிரச்சினை

பெண்கள் மற்றும் சிறுமிகளின் இயற்கைக்குப் புறம்பான இறப்பானது, குறிப்பாக அவை காயம் அல்லது அதிர்ச்சிமிக்கதாக அல்லது அதன் வடிவம் அதாவது கொலைகள், தற்கொலைகள், விபத்துக்கள் அல்லது உறுதிசெய்யப்படாத காரணிகளின் அடிப்படையிலான இறப்புக்களாக இருக்குமிடத்து அவை பொது மக்கள் மத்தியில் பரவும் ஒரு வகை செய்தியாகும். அவ்வாறான இறப்புக்கள் பற்றிய செய்தியைப் பகிர்ந்தளிக்கும் பிரதான மூலமாக ஊடகப் பதிவுகள் உள்ளன. இன்று இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அரச மற்றும் தனியார் பத்திரிகைகள் 25 உள்ளன (சிங்களம் 11, தமிழ் 5, ஆங்கிலம் 9). இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் மீதான விசாரணைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தல் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான செய்தியை வழங்குவதே ஊடகப் பிரசுரங்கள் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்டுக்கோப்பை குற்றவியல் சட்டக் கோவையும் ஏனைய சட்டங்களும் அதேபோல ஒழுக்கக் கோவைகள் மற்றும் வழிகாட்டல்களும் வழங்குவதுடன், விசேடமாக ஊடகவியலாளர்கள் இவற்றைப் பேணி நடப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக, பாலியல் வன்முறை, ஆட்கடத்தல் மற்றும் கடத்தல், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் , வன்புணர்ச்சியும் தகாப்புணர்ச்சியும், இயற்கைக்குப் புறம்பான குற்றங்களும் கடுமையான பாலியல் துஷ்பிரயோகங்களும், மற்றும் அநாகரீகமான செயற்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்தி ஆவணப்படுத்தல் குற்றவியல் சட்டக் கோவையின் படி தண்டனைக்குரிய குற்றமாகும். இருப்பினும், சில விதிவிலக்குகளும் உள்ளன, அதாவது, பொலிஸ் நிலையத்துக்கு அல்லது விசாரணைக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் 'விசாரணையின் நோக்கங்களின் நன்நம்பிக்கை அடிப்படையில்' அல்லது ' பாதிக்கப்பட்டவரின் எழுத்து மூல விருப்பு இருக்குமிடத்து' அல்லது 'இறந்த பாதிக்கப்பட்டவரின் வாரிசுகளின், அல்லது பருவமடையாத அல்லது மனநிலை பாதிக்கப்பட்ட பாதிப்படைந்தவர்களின் பெற்றோர்/பாதுகாவலரிடமிருந்தான எழுத்து மூல அங்கீகாரம் கிடைக்கப்பெறுமிடத்து அடையாளப்படுத்தலாம்.[1]

மூன்று மொழிகளிலும் பத்திரிகைப் பதிவேடுகள் பிரச்சினைக்குரியதாக இருப்பினும், பரவலாகவே சிங்களப் பத்திரிகைகள் இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களைப் பதிவிடுவதில் ஒழுங்கான வழிகாட்டல்கள் அல்லது பதிவிடலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர ஒழுங்குகளுக்கு உட்பட்டதாக அமையப்பெறவில்லை. பொதுவாகவே சிங்களம் மற்றும் தமிழ் பத்திரிகைச் செய்திகள் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் அழுத்தங்கள் பற்றிய எவ்வித கவனமும் இன்றி, அவர்களையும் அவர்களது குடும்பங்களையும் அறியப்படுத்தி பேசுபொருளாக மாற்றி, அவர்களது அயலவர்களுக்கு மாத்திரமன்றி நாடளாவியரீதியில் வெளிக்காட்டுவதன் மூலம் அவர்களது பெயர்கள், முகவரிகளை அடையாளப்படுத்துகின்றன. குற்றவாளியாகக் கருதப்படுபவர்கள் மற்றும் சந்தேக நபர்கள் குற்றவாளியாக நி'ரூபிக்கப்படுவதற்கு முன்னரே சமூக விமர்சனத்துக்கும் குரோதத்துக்கும் உட்படும் வகையில் அவர்களது பெயர்கள் கூட வெளியிடப்படுகின்றன. மேலும், சிங்களப் பத்திரிகைகளில் கட்டுரைகளின் விவரணங்கள், புகைப்படம், தலைப்பு, வர்ணங்கள், விபரங்கள், இடைவெளியும் ஆக்கத்துக்கான இடஒதுக்கீடும் பாரிய பரபரப்பு மிக்கதாகவும் உணர்ச்சி பொங்குவதாகவும் உள்ளன. தகவல்களை திரிபுபடுத்துவதில் அவதூறுகளும் மிகைப்படுத்தல்களும் காணப்படுகின்றன.

1 Penal Code (Amendment) [31 St October , 1995 ] <http://www.hrcsl.lk/PFF/LIbrary_Domestic_Laws/Legislations_related_to_Employment/Penal Code (Amendment) Act No 22 of 1995.pdf> [accessed 6 November 2017].

ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்க விதிக் கோவை (இலங்கை ஊடக சபை சட்டம்)[2] செய்திப் பதிவில் தனிநபர்களின் தனிப்பட்ட விடயங்களுக்கும் கௌரவத்துக்கும் ஊடகவியலாளர்கள் மதிப்பளிக்க வேண்டும் எனவும் ஆக்கத்தின் உள்ளடக்கம் பற்றிய விமர்சனத்திலிருந்து தவிர்த்துக்கொள்ளுமாறும் வேண்டுகிறது. இவர்கள் எவ்வகையான நடவடிக்கைகள் மூலமும் அல்லது வேண்டுமென்றோ உண்மைகளைத் திரிபுபடுத்தாமல் இருப்பதற்கும், புண்படுத்தும் வகையிலான அல்லது இழிவுபடுத்தும் விடயங்களைப் பிரசுரிப்பதிலிருந்தும் தவிர்த்துக்கொள்ளும் படி எதிர்பார்க்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான 2015 இன் 04 ஆம் இலக்கச் சட்டத்தின்3 உதவியுடன் ஒரு பாதிக்கப்பட்டவரின் உரிமையைமீறி, பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சியாளர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலும் ஒரு நபரின் அடையாளத்துடன் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துமிடத்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியும்.



**இன்னும், இந்த சட்ட தர நிர்ணயங்களும், கொள்கை வழிகாட்டல்களும் இருந்தும் பத்திரிகை பதிவேட்டில் உள்ள நாளாந்த மீறல்கள் தொடர்பில் உரிய நிறுவனங்கள் மிகவும் அரிதாகவே செயற்படுகின்றன.[4]**

ஊடகத்தில் வன்முறைகளை வெளிப்படுத்தும் தன்மை அதனைப் பார்ப்பவர்களதும் வாசிப்பவர்களதும் நடத்தையில் பாதிப்புச் செலுத்தும் என்பது பாதிப்புக்களின் தாக்கம் பற்றிய சர்வதேச ஆய்வுகளின் சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசரீதியில் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டும் உடன்பாடற்றதொரு விடயமாகவும் உள்ளது.[5]

1994 இல் பாய்க் மற்றும் கொம்ஸ்டொக் ஆகியோரின் தகவல் ஆய்வின் அடிப்படையில், சிறியது (விளையாட்டுப் பொருட்களுக்கு எதிரான அற்ப வன்முறை) தொடக்கம் பாரதூரமான (குற்றச்செயல்களுடனான வன்முறை) வரையிலான உயர்மட்ட சமூக விரோத செயல்களுடன் தொடர்ச்சியாக ஊடக வன்முறைகளைப் பார்ப்பது தொடர்புபடுவது புலப்படுகிறது[6]. இது பிரச்சினைகளுக்கான தீர்வாக வன்முறையை ஏற்றுக் கொள்வதிலிருந்து, அதிகரித்த விரக்தி மற்றும் தமது வேதனைகளை மற்றையவர்களுக்குத் திணித்தல் உள்ளிட்ட விளைவுகளை உள்ளடக்குகிறது.



**மருத்துவ ஆவணங்களின் படி, தற்கொலை ஊடகப்பதிவுகளுக்கும் சமூகத்தில் தற்கொலை நிகழ்வுகள் அதிகரிப்புக்கும் இடையே தொடர்பு இருப்பது 'Werther effect'[6] என அறியப்படுகிறது. குறிப்பாக குறித்தவொரு முறைமையைப் பிரயோகித்தலும் குறித்த ஒரு கால அவகாசமும் காணக்கூடியதாக உள்ளது.[7]**

1980களின் ஆரம்பப் பகுதிகளிலிருந்து விஸ்தரிக்கப்பட்ட பத்திரிகைப் பிரசுரிப்பானது இலங்கையில் தமக்குத் தாமே தீங்கு ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் தற்கொலை முயற்சி முறைமைகளை பிரதிபன்னலும் அவற்றில் ஒன்றான அறளி விதையை உட்கொள்வது பன்மடங்கு அதிகரித்தமையும் வெளிக்காட்டுகிறது[8]. 2014 இன் Suh S, Chang Y, Kim N அறிக்கையின் படி ஒரு வாரத்தில் அல்லது குறித்த காலப் பகுதியில் தற்கொலை வீதத்தில் ஏற்படும் ஒரு பொதுவான அதிகரிப்பானது தற்கொலை பற்றிய ஊடகப் பதிவின் சாதனையாகும்.[9]



**வெகுசன ஊடகமானது தற்கொலை முயற்சிகளைத் தடுப்பதற்கும் பிரயோகிக்கப்படலாம் என்பதற்கான அதிகரித்த சான்றுகள் உள்ளன. இது 'Papageno effect' என அறியப்படுகிறது[10 10 11 12 13]**

தற்கொலை சிந்தனையை புறக்கணித்து அதனை வலுவிழக்கச் செய்யும் வகையிலான தற்கொலைச் செய்திப் பிரசுரிப்புக்கான குறித்த வழிகாட்டல்களை தற்போது WHO ஊக்குவித்து வருகிறது.[14]

2 'Ethics Code | Sri Lanka Working Journalists Association' <http://www.slwja.lk/ethics.php> [accessed 6 November 2017].
3 'Assistance to and Protection of Victims of Crime and Witnesses Act,, No. 4 OF 2015' <http://www.srilankalaw.lk/gazette/2015_pdf/4 of 2015.pdf> [accessed 6 November 2017].
4 Huesmann LR, Taylor LD. The Role of Media Violence in Violent Behavior. Annu Rev Public Health. 2006;27(1):393-415. doi:10.1146/annurev.publhealth.26.021304.144640.
5 Cantor J. Media violence. In: Journal of Adolescent Health. Vol 27. ; 2000:30-34. doi:10.1016/S1054-139X(00)00129-4.
6 Niederkrotenthaler T, Herberth A, Sonneck G. The "Werther-effect" legend or reality?] Neuropsychiatr. 2007;21(4):284-290.
7 Chen Y-Y, Chen F, Yip PSF. The impact of media reporting of suicide on actual suicides in Taiwan, 2002-05. J Epidemiol Community Heal. 2011;65(10):934-940. doi:10.1136/jech.2010.117903.
8 Eddleston M, Ariaratnam CA, Meyer WP, et al. Epidemic of self-poisoning with seeds of the yellow oleander tree (Thevetia peruviana) in northern Sri Lanka. Trop Med Int Heal. 1999;4(4):266-273. doi:10.1046/j.1365-3156.1999.00397.x.
9 Suh S, Chang Y, Kim N. Quantitative exponential modelling of copycat suicides: association with mass media effect in South Korea. Epidemiol Psychiatr Sci. 2015;24(2):150-157. doi:10.1017/S204579601400002X.
11 Niederkrotenthaler T, Voracek M, Herberth A, et al. Role of media reports in completed and prevented suicide: Werther v. Papageno effects. Br J Psychiatry. 2010;197(3):234-243. doi:10.1192/bjp.bp.109.074633.
12 Sisask M, Värnik A. Media roles in suicide prevention: A systematic review. Int J Environ Res Public Health. 2012;9(1):123-138. doi:10.3390/ijerph9010123.
13 Niederkrotenthaler T, Reidenberg DJ, Till B, Gould MS. Increasing help-seeking and referrals for individuals at risk for suicide by decreasing stigma: The role of mass media. Am J Prev Med. 2014;47(3 SUPPL. 2). doi:10.1016/j.amepre.2014.06.010.
14 WHO | Preventing suicide: a resource for media professionals - update 2017. WHO. 2017. http://www.who.int/mental_health/suicideprevention/resource_booklet_2017/en/. Accessed November 6, 2017

## இயற்கைக்குப் புறம்பான இறப்பு என்றால் என்ன?

இயற்கைக்குப் புறம்பான இறப்பு என்பது நோய் அல்லது வயோதிபம் காரணமாக ஏற்படும் இறப்பல்ல, மாறாக காயம், அதிர்ச்சி அல்லது நஞ்சூட்டல் போன்ற வெளிக் காரணிகள் மூலம் ஏற்படுவதாகும். இவ்வகையான இறப்புக்களின் தன்மை மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப அவை கொலை, தற்கொலை, விபத்து அல்லது காரணம் அறியப்படாததாக இருக்க முடியும்.

## ஆய்வு பற்றி

பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் இயற்கைக்குப் புறம்பான பெண்கள் இறப்புக்கள் பற்றியதொரு தேசிய ஆய்வை 2015 டிசெம்பர் மாதம் UNFPA முன்னெடுத்தது:

(அ) தோந்தெடுக்கப்பட்ட இலங்கை பத்திரிகைகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் இறப்பு இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் பற்றிய பதிவின் வகைகள், காயத்தின் தன்மை மற்றும் அவற்றுடன் தொடர்பான காரணிகளைப் பரீட்சித்தல்,

(ஆ) இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் பற்றிய பத்திரிகை செய்திப் பிரசுரம் பற்றி விபரித்தல், மற்றும்

(இ) ஒழுங்கு முறையிலான பத்திரிகை செய்திப் பிரசுரத்திற்கான கொள்கை வகுப்பு மற்றும் வழிகாட்டல் வழங்கல்.

பிரத்தியேகமான சில பத்திரிகைகளைத் தெரிவுசெய்வதற்கான அடிப்படை யாதெனில் குறித்த சிங்களப் பத்திரிகை பிரதிகள் 150,000, தமிழ் பத்திரிகைகள் 120,000 மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகள் 88,000 உம் தேசிய மட்டத்தில் வினியோகிப்படுகின்றன.

ලංකාදීප

வீரகேசரி

Daily News

**2016 செப்டெம்பர் தொடக்கம் 2017 மார்ச் வரையிலான 6 மாத காலப்பகுதியில் இயற்கைக்குப் புறம்பான பெண் இறப்புக்கள் தொடர்பான கட்டுரைகள் பற்றிய ஆய்வு**

**ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன**

| 88 | 31 | 33 |
|---|---|---|
| சிங்கள கட்டுரைகள் | தமிழ் கட்டுரைகள் | ஆங்கிலக் கட்டுரைகள் |

இந்தக் கட்டுரைகளின் காட்சிப்படுத்தல், வடிவமைப்பு மற்றும் மொழிப்பிரயோகம் என்பனவற்றுடன் நம்பகத்தன்மை, கருத்துக்கள், கவர்ச்சித்தன்மை, உணர்வுபூர்வமான தன்மை மீது ஒரு ஊடகவியல் கட்டமைப்புக்குள் கூடிய கவனம் செலுத்தி ஆராயப்பட்டுள்ளது. அதன்படி, மூன்று மொழிப் பத்திரிகைகளின் 152 கட்டுரைகளும் அவற்றின் பண்புரீதியான உள்ளடக்கத்தின் அடிப்படையில் கருத்தியல் ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

இதற்குச் சமாந்திரமாக, இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட பெண்களுக்கு மத்தியிலான இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களின் பதிவும், விவரணமும் பற்றிய ஆய்வுக்காக பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களிலிருந்து பெறப்பட்ட சான்றாதாரங்களுடனும் இவை தொடர்புபடுகிறது.

ஆங்கில ஊடகப் பதிவுகள் சுருக்கமானதாகவும் 'பொலிஸ் முறைப்பாடு' என கட்டமிடப்பட்டும் இருந்தன. பொதுவாக ஆங்கிலப் பத்திரிகைகளில் பிரசுரமான செய்திகள் 50-100 சொற்களைக் கொண்டிருந்தன. இருப்பினும் இது சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகளில் 100 சொற்கள் தொடக்கம் அரை பக்கமளவு வரை நீண்டு காணப்பட்டது. விசாரணைகள் மூலம் சேகரிக்கப்பட்ட விபரங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்கள் ஆக்கங்கள் நீளமானதாக உள்ளன. விசாரணை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள், அவர்களது பெயர்கள், மற்றும் இலட்சினைகள் மூலம் அடையாளப்படுத்தப் பட்டிருந்தனர். வாசிப்பாளர்கள் தாமாகவே தீர்மானித்துக் கொள்ளும் வகையில் ஆங்கிலச் செய்திகளில் தரவுகள் வழங்கப்பட்டிருந்தன. குறிப்பாக, சிங்கள மற்றும் தமிழ் கட்டுரைகள் உரிய தரப்பினர்களின் கூற்றுக்கள் மற்றும் கருத்துக்களையும் உள்ளடக்கியிருந்தன.

## ஆய்வின் முக்கிய முடிவுகள்



## பத்திரிகைப் பதிவேடுகளில் நிகழ்வுகளின் பரம்பல் பாங்கு




### விபத்துக்களின் வகை பற்றிய பகுப்பாய்வு

| | சுவயு | புகையிரதம் | தீ | காயம் | ஏனைய |
|---|---|---|---|---|---|
| சிங்களம் | 34 | 7 | 4 | 4 | 5 |
| ஆங்கிலம் | 13 | 1 | 1 | - | 1 |
| தமிழ் | 4 | - | - | - | 1 |
| மொத்தம் | 51 | 8 | 5 | 4 | 7 |

வீதி விபத்துக்கள் மூலமான இறப்பானது விபத்துக்களில் பரவலாகப் பதிவாகியுள்ளது.

### தற்கொலைகளின் வகை பற்றிய பகுப்பாய்வு

| | தூக்கில் தொங்கி | சுய நடவடிக்கை | நீரில் மூழ்கி | ஏனைய |
|---|---|---|---|---|
| சிங்களம் | 4 | 1 | - | 3 |
| ஆங்கிலம் | 3 | 1 | - | 1 |
| தமிழ் | 5 | - | 2 | - |
| மொத்தம் | 12 | 2 | 2 | 4 |

தூக்கிடலானது தற்கொலையில் பரந்தளவில் பதிவாகியுள்ளது.

### මිනීමැරුම් වර්ග පිළිබඳ විශ්ලේෂණය

| | குரல்வளையை நெறித்தல் | கூரிய அழுத்தம் | மழுங்கிய அழுத்தம் | தீ வைப்பு | துப்பாக்கிச் சூடு | ஏனைய |
|---|---|---|---|---|---|---|
| சிங்களம் | 3 | 11 | 2 | 1 | 2 | 3 |
| ஆங்கிலம் | 1 | 1 | 2 | - | 1 | 2 |
| தமிழ் | 6 | 2 | 3 | 2 | - | 4 |
| மொத்தம் | 10 | 14 | 7 | 3 | 3 | 9 |

கூரிய அழுத்தம் மூலமான இறப்பானது பரவலாக பதிவாகிய கொலை வகையாகும்.

**குற்றவாளியின் பாலினம்**




**குற்றவாளியின் விபரம்**



- அடையாளம் காணப்படாத இறப்புக்கள் தவிர்ந்த, பெரும்பாலும் அனைத்து செய்திப் பிரசுரங்களும் பாதிக்கப்பட்டவரின் முழுப் பெயர், முகவரி ஆகியனவற்றுடன் பொலிஸ் நிலையத்துக்கு அல்லது விசாரணைக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியின் விபரத்துடன் அடையாளப்படுத்தப்படுகின்றன. குற்றவியல் சட்டக் கோவையில் ‘விசாரணை உத்தியோகத்தர் மூலம் அல்லது அவரது கட்டளைப்படி’ பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கு வழங்கப்பட்டுள்ள விதிவிலக்கான ஏற்பாடானது தொடர்ந்தும் ஊடகச் செயன்முறையில் தவறான முறையில் விதைந்துரைக்கப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்கமைய குறிப்பிடப்படுவது யாதெனில், பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதை ஒதுக்கிவிட்டு விசாரணையின் நன்நோக்கின் அடிப்படையில் பொலிஸ் செயற்பட வேண்டும் என்பதாகும்.

- அதே போல, தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு நேர்மறையாக சிங்களப் பத்திரிகைகளில் சந்தேகிக்கப்படும் குற்றவாளி/பொறுப்பானவர்கள் விபரங்கள் அடிக்கடி பிரசுரிக்கப்படுகின்றன.

- பொலிஸ் விசாரணைகள் நிறைவடையாத சந்தர்ப்பத்திலும், தற்கொலை மற்றும் கொலையுடன் தொடர்பான பல செய்திப் பதிவுகள் சார்புக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை முன்வைக்கின்றன.

- ஒரு கட்டுரையின் உணர்வுபூர்வமான தலைப்புக்களுக்கும் உள்ளடக்கத்துக்கும் இடையே தொடர்பற்றதாகவும் தவறாக வழிநடாத்துவதாகவும், குறிப்பாக சிங்களப் பத்திரிகைகளில் பொதுவாகவே காணப்படுகின்றன. போதிய தகவல் மற்றும் சமூகப் பகுப்பாய்வின்மையானது உணர்வுபூர்வமான வசனங்கள், பல் வர்ண வரைபடங்கள், மிகைப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் மூலம் மூடிமறைக்கப்படுகின்றன. வன்முறை சார்ந்த தகவல்கள், வாய்ச் சொற்கள், ஒரே சீரானதன்மை, நாடக மற்றும் உணர்வுபூர்வமான எழுத்து மற்றும் சோகத்தை மிகைப்படுத்தல் என்பனவற்றின் உள்ளடக்கமானது விடயத்தின் யதார்த்தத்தை பொதுவாகவே நலிவடையச் செய்கிறது.

## உணர்வூட்டும் தலைப்புக்களின் உதாரணம்

(சிங்கள மொழிபெயர்ப்பு)

“பதினெட்டு வயது தாய் வெட்டிக் கொலை”

“புகையிரத மேடையில் இருந்த ஒரு இளவயது வெண்ணிற பெண்ணின் துண்டிக்கப்பட்ட கால்கள் புகையிரதத்துக்கிடையே சிக்கியது”

“போதைப் பொருள் வாங்க காசு கொடுக்காமையினால் ஆரபணங்களுக்காக சட்டத்துக்குப் புறம்பான மனைவி கொலை”

“ஒரு பெண்ணின் உடல் சிதைவுகள் ஒரு மரத்தில் அகோரமாக செருகிக்கிடந்தது. அவளது ஒரு வயது பாலகன் கானில் வீசப்பட்டிருந்தான்”

“பாலூட்டிக் கொண்டிருந்த தாயின் கழுத்தை கள்ளக் காதலன் வெட்டினான்”

## அற்ப விடயங்கள் ஊடாக இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் மீதான கவனயீர்ப்பு

கொலைக்கான உடனடிக் காரணம் ஒரு அற்ப விடயம் என நியாயப்படுத்துவதே ஒரே காரணமாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதொரு விடயமாகவும் புலப்படுகிறது.

“காலை உணவு தாமதித்தமையால் தடியால் தாக்கி 73 வயது தாயைக் கொன்ற மகன்”

தலைப்பில் பிரயோகிக்கப்படும் மொழிநடை இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களை முக்கியமற்றதாக்குகிறது

“பாயில் உறங்கிக்கொண்டிருந்த மூன்று பிள்ளைகளின் தாயை கொலை செய்த இரண்டு பிள்ளைகளின் தந்தை கைது”

“இறப்பை கதாபாத்திரமாக்கல் (துறுக்மாராயா/ கினிரகுஸா/புஞ்சி சமனலிய)”

## இட்டுக்கட்டல்

ஆண் பெண்களுக்கிடையிலான சட்டத்துக்குப் புறம்பான தொடர்புடனான பாலியல் விடயத்தை அடிப்படையாகக் கொண்ட ஊடக இட்டுக்கட்டல்கள் (விசேட தலைப்புக்களில்) அடிக்கடி காணப்படுகிறது. மேலும், தமது நடத்தைகளில் பெண்கள் பொறுப்பற்றவர்களாக அல்லது அவர்களது தலைவிதிக்கு அவர்களே காரணமானவர்கள் என குறிப்பட முனைவதை பொதுவாகவே அவதானிக்கலாம்.

> “பாயில் படுத்திருந்த மூன்று பிள்ளைகளின் தாயைக் கொன்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை கைது (பாதிக்கப்பட்டவருக்கும் குற்றமிழைத்தவருக்கும் இடையே ஒரு உறவு உள்ளதாக வெளிக்காட்டுகிறது).”

> “பெண்ணின் எரிந்த உடல் அறையில் கண்டெடுப்பு (அவரது படுக்கை அறை என்பதற்குப் பதிலாக ஹோட்டல் அறை என்பது வெளிப்படுகிறது)”

> “செல்பி எடுத்துக்கொண்டிருந்த சீன யுவதி புகையிரதத்திலிருந்து விழுந்து இறந்தார் (பொறுப்பற்ற நடத்தையின் வெளிப்பாடு)”

> “தந்தை கட்டிய மதில் இடிந்து விழுந்து எட்டு வயது பிள்ளை இறப்பு (ஒரு மேசனாகவன்றி, ஒரு தந்தையாக ஒரு மதிலைக்கட்ட முடியாது)”

சிங்களப் பத்திரிகைகளின் அநேகமான கட்டுரைகள் பெண்களை அவர்களது பால்நிலை வகிபாகங்களைக் (தாய், மனைவி, மகள், அம்மா, ‘சட்டத்துக்குப் புறம்பான’ மனைவி) கொண்டே அழைக்கின்றன. அதேநேரம், ஆங்கிலப் பத்திரிகைகள் அவர்களை ‘பெண்’ என்று பொதுவாகவே அடையாளப்படுத்துகிறது. சில வேளைகளில், பாதிக்கப்பட்டவர்கள் மொழிநடை மற்றும் வரைபடங்கள் ஊடாக பாலியல் மயப்படுத்தப்படுகின்றனர். எவ்வித வேறுபாடுகளுமின்றி, தொடர்புபட்டவர்களின் வயதும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் (86 மூதாட்டி உட்பட) குறிப்பிடப்படுகிறது. இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரமே, இறந்த பெண்கள் அவர்களது தொழிலை அடிப்படையாகக் கொண்டு அடையாளங்காணப்பட்டிருந்தனர்.

## சிங்களப் பத்திரிகைகளில் செய்திப் பதிவு விவரணம்

- கட்டுரையின் பாதி அளவிலும் அதிக இடம் பல வர்ண பின்னணியில், கொட்டை எழுத்தில், கவர்ச்சிகரமான தலைப்பு அல்லது உப தலைப்புக்களுடன் அறிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன.
- விபத்துக்கள் பெரும்பாலும் வாகனம் அல்லது பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுபூர்வமான புகைப்படத்துடன் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- ஏனைய படங்கள் கண்ணீர் வடிக்கும் தாய், இரத்தக்கறை, தகர்ந்த வாகனம், மற்றும் பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றமிழைத்தவர் எனக் கருதப்படுபவர்களை உள்ளடக்கியிருக்கும்.

உதாரணங்கள்:



ஆய்வுக் காலப்பகுதியில் மூன்று கட்டுரைகள் மாத்திரமே (லங்காதீப) சமூகப் பொறுப்பு (நிகழ்வுடன் தொடர்பான சமூக எதிர்ப்பு மற்றும் தற்கொலைகள் மற்றும் கொலைகளைத் தடுக்க எடுக்கும் நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைப்புக்கள்) பற்றிப் பிரசுரித்திருந்தன.

பாதிக்கப்பட்டவர்களது உறவினர்களுடனான நேர்காணல்களின் படி, மன அழுத்தத்துக்கு உட்பட்ட நிலையில் அவர்களை ஊடகவியலாளர்கள் பிழையாக வழிநடாத்த முற்பட்டுள்ளனர் என்பது புலப்படுகிறது. செய்திப் பிரசுரத்தில் அவர்களது கூற்றுக்கள் தவறான முறையில் திரிபுபடுத்தப் பட்டிருந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## விவாதம்

போட்டி உரிமைகள் மற்றும் தெரிவுகள் காரணமாக பத்திரிகைப் பதிவேடுகள் பற்றிய விவாதமானது ஒரு சிக்கல்மிக்கதொன்றாகும். சமூகத்தின் ஒரே அபிலாசை யாதெனில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இயலுமானவரை நீதி கிடைப்பதுடன் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதேபோல், பாதிக்கப்பட்டவர்களது (குடும்பம் உள்ளிட்ட) இறப்பிலும் அவர்களது அடையாளம், தன்மானம் மற்றும் கௌரவம் பாதுகாக்கப் படுவதற்கான சட்ட மற்றும் ஒழுங்கு விதி பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறுவப்பட்டுள்ளன.

சில சந்தர்ப்பங்கள் தவிர, இலங்கையின் சட்டமானது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உறவினர்களின் அந்தரங்க விடயங்களைப் பாதுகாக்க எதிர்பார்கின்றது. இருப்பினும் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் குற்றமிழைத்தவராகக் கருதப்படுபவர்களின் அடையாளங்களை ஊடக நியதியின் படி வெளியிடப்படுவதற்கான நெகிழ்வுத்தன்மை காணப்படுகிறது. மேலும், பத்திரிகைகளுக்கிடையே நிலவும் கடும் போட்டித்தன்மையானது (பிரதான மற்றும் சமூக ஊடகத்தில்) அதிகரித்த பொறுப்பற்றதும் முறைகேடானதுமான ஊடகப் பதிவேட்டுக்கும் வழிவகுத்துள்ளது. உதாரணமாக, கிடைக்கப்பெறும் தகவல்களுக்கமைய கட்டுரைகளின் பிரதான நோக்கம் உணர்வு பூர்வமானதாக இருப்பினும் பெண் பாதிப்பாளர்கள் நேர்மறையாகவே சித்தரிக்கப்படுகின்றனர். அதேபோல, பெண்கள் உரிமைகள் பாதிக்கப்பட்டவர்களது உரிமைகள், மற்றும் குற்றமிழைத்தவராக கருதப்படுபவர்களின் உரிமைகள் எனும் விடயங்கள் முதன்மைப்படுத்தப் படுகின்றன. அத்துடன், இவ்வாறான சூழ்நிலையில் வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் மனித நடத்தையியலில் செல்வாக்குச் செலுத்தும் ஊடகத்தின் பங்கு தொடர்ச்சியாக விவாதிக்கப்படுகிறது.

இதற்குப் புறம்பாக, தகவல்களுடனான செய்தியை அறியும் உரிமை பொது மக்களுக்கும் உள்ளது. விரிவானதும் விபரமானதமான ஊடகப் பதிவேடுகள் இந்த வழக்குகளுடன் தொடர்பான சட்ட முன்னெடுப்புக்களை துரிதப்படுத்தும் சாத்தியப்பாடும் உள்ளது. இருப்பினும், தனிநபர்கள் விடயத்தில் ஊடகத்தின் ஊடுருவல் என்பது கசப்பான விடயமாகவன்றி யதார்த்தபூர்வமாக மக்கள் விருப்புடன் ஊக்குவிக்கப்பட வேண்டுமென விவாதிக்கப்படுகிறது (உ-ம் இந்திய ஊடக சபை). இருப்பினும், சில விடயங்கள் சட்ட வரம்புக்கு உட்பட்டதாகும், குறிப்பாக ஒரு விடயம் பொதுப் பதிவுக்கு உட்படுமிடத்து அந்தரங்க உரிமை முதன்மைபெறுகிறது.

உபபிரிவு (1) இல் குறிப்பிடப்படும் பாதுகாப்பு மற்றும் உதவியின், உள்ளடக்கமானது:

குற்றவியல் பாதிப்பாளர் அல்லது சாட்சிகளின் அடையாளங்கள் மற்றும் வாக்குமூலத்தை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியையேனும் குறித்த சந்தேக நபர் அல்லது அவரது சட்டப் பிரதிநிதி தவிர்ந்த மற்றையவர்களுக்கு வெளிப்படுத்துவதை தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளானது குற்றப் பாதிப்பாளர்கள் அல்லது சாட்சிகளின் அடையாளத்துடன் தொடர்பான தகவல்களை பிரசுரித்தல், ஒலிபரப்புச் செய்தல், காட்சிப்படுத்தல் அல்லது பகிர்ந்தளித்தலிலிருந்து ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய குறித்த நபர்களை நெறிப்படுத்தும் அதிகாரத்தையும் உள்ளடக்கல் வேண்டும்.

***2015 இன் 4 ஆம் இலக்க குற்றப் பாதிப்பாளர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவுவதற்கும் பாதுகாப்பதற்குமான சட்டம்***

## ஊடகப் பொறுப்பு

- மன அழுத்தத்துக்கு உட்பட்டுள்ள நிலையில் அங்கு ஊடுருவி அவர்களது சோகங்களைக் கிளறுவது ஒரு ஒழுக்கப் பிரச்சினையாகும். மன உளைச்சலுக்கு உட்பட்ட குடும்ப உறுப்பினர்களை தவறான நோக்கில் நேர்காண்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல்.

- அதிர்ச்சிக்கும் மன அழுத்தத்துக்கும் உட்பட்டிருப்பதை கருத்தில் கொள்ளவும். நேரடி அல்லது மறைமுகமான குறிப்புக்கள் அல்லது விபரங்கள் (பெயர், முகவரிகளை வழங்க வேண்டாம்) ஊடாக பாதிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை அடையாளம் காண்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல்.

- குறிப்பாக, விசாரணையின் நன்மை கருதி பொலிஸினால் அடையாளம் காணப்பட்ட பாதிப்பாளர்கள் சரியானவர்களே என ஊகிப்பதிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

- குற்றப்புலனாய்வு முடிவுரைகள் வெளிவருவதற்கு முன்னர் ஊகங்களின் அடிப்படையில் இது தான் நடந்தது என செய்தி வெளியிடுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல். ஏனெனில், இது விசாரணை மற்றும் சந்தேகத்துக்குரிய விடயங்களுடன் வித்தியாசப்படலாம்.

- ஊடக அறிக்கையிடலில் பாதிக்கப்பட்டவர்களின் பாலியல் நடத்தை பற்றிய மிகைப்படுத்தப்பட்ட செய்திகளைப் பிரசுரிப்பதிலிருந்து (தலைப்பு உள்ளிட்ட) தவிர்ந்து கொள்ளல். இது குடும்ப உறுப்பினர்களையும் புண்படுத்தலாம்.

- பத்திரிகைப் பதிவுகள் 'யாருக்கும் பாதிப்பற்ற' தத்துவத்துக்கு அமைய இருத்தல். நேர்காணப்பட்டவர்களின் வசனங்கள் தவறான அல்லது சிதைந்து அலலது பிழையான அர்த்தத்தைக் கொடுப்பதாக பிரயோகிக்கப்படக் கூடாது.

- மேலோட்டமான செய்திப் பிரசுரம் மூலம் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பாதிப்படையலாம் என்பதை மனதில் வைத்திருத்தல். இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களின் காரணத்தை ஊகிக்கவோ கதைகட்டவோ வேண்டாம்.

- தர ஒழுங்கு நடைமுறைகளுக்கமைய, குற்றங்களை வெளிப்படுத்தும் செய்தித் தலைப்புக்கள்/உள்ளடக்கம் என்பன உரிய நிறுத்தல் குறியீடுகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தல்.

- ஒரு மாற்றத்தை உருவாக்கல். உளவள ஆலோசனை நிலையங்கள், சட்ட உதவி, உதவிக் குழுக்கள், அவசர தொடர்பு, ஆகியன கிடைக்கப் பெறும் வழிவகைகள் மற்றும் வளங்கள் பற்றி பொது மக்களுக்கு அறியக் கொடுத்தல்.

- இயற்கைக்குப் புறம்பான இறப்புக்கள் பற்றிய எதிர்மறையான ஊடகப் பதிவினால் பாதிக்கப்படக்கூடிய மக்களும் இருப்பார்கள் என்பதை கருத்தில் கொள்ளல். விபத்து மற்றும் தற்கொலைகள் பற்றிப் பதிவிடும் போது தடுப்பு முறைமைகள் பற்றிய விடயத்தை உள்ளடக்கல்.

- பாதுகாப்பு, நிவாரணம் மற்றும் ஆட்களைக் கொலை செய்வதற்கு எதிரான எதிர்பார்ப்புக்களுடன் தொடர்பான செய்திகளைப் பிரசுரித்தல்.

- இவை அனைத்துக்கும் மேலாக, ஊடகத் துறையில் சிறந்தவராக இருத்தல்.

## சட்டமும் கொள்கையும்

- உணர்ச்சிமிக்கதும் பொறுப்புமிக்கதுமான ஊடக பதிவேட்டில் உலகளாவியரீதியிலான புதிய அபிவிருத்திகள் ஏற்பட்டுவருகின்றன. தற்கொலைகள், கொலைகள், மற்றும் விபத்துக்களை பதிவிடுவதில் கடைபிடிக்க வேண்டிய புதிய ஒழுக்க நெறி வழிகாட்டல்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

- ஊடக நிறுவனங்களுக்குள்ளே ஒழுக்க நெறியுடனான பத்திரிகைப் பிரசுரத்திற்கான வழிகாட்டல்களை தயாரித்தல்/அமுல்படுத்தல்.

- பொலிஸ் மற்றும் நீதித் துறை பத்திரிகை செய்திப் பிரசுரம் தொடர்பாக நடைமுறையில் உள்ள சட்டங்களை அமுல்படுத்துவதுடன் அவற்றுடன் இணங்கிப்போதல் வேண்டும்.

- ஒழுங்கு முறையான ஊடகத்துறைக்கு பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, ஆசிரியர் குழுமம், இலங்கை தொழிற்பாட்டு ஊடகவியலாளர் சங்கம் ஆகியனவற்றின் வழிகாட்டலைப் பேணல்.

## கௌரவமானதும் உணர்ச்சிமிக்கதுமான செய்திப் பதிவேடு

- பத்திரிகை முகவரகங்களுக்கிடையே கடுமையான போட்டித்தன்மை காணப்பட்டாலும், இயற்கைக்குப் புறம்பான இறப்பு விடயத்தில் ஆக்ரோஷமானதும் உணர்வுகளைத் தூண்டக் கூடியதமான தலைப்புக்களைத் தவிர்த்தல்.

- பத்திரிகையின் நற்பெயரைத் தக்கவைக்கும் வகையில் செய்தியின் உள்ளடக்கம் நியாயப்படுத்துவதாக அதன் தலைப்பு அமைவதை உறுதிசெய்தல்.

- பாதிக்கப்பட்டவர்கள் எதிர்மறையான ஊடகப் பதிவிடல் மூலம் விசேடமாகப் பாதிக்கப்படுவார்கள். சிதைந்த தேகங்களின் புகைப்படங்கள் அல்லது பயம் ஏற்படுத்தும் அல்லது வெறுப்புணர்வைத் தோற்றுவிக்கும் அல்லது சமூக உணர்வுகளைத் தூண்டும் ஏனைய படங்களைப் பிரசுரிப்பதிலிருந்தும் தவிர்த்துக்கொள்ளல்.

- இயற்கைக்குப் புறம்பான இறப்புக்களை மிகைப்படுத்தும் வகையிலான பத்திரிகை கட்டமைப்பு மற்றும் வரைபடங்கள் ஊடாக உணர்வுகளைத் தூண்டுவதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ளல்

- ஊடக வன்முறையின் உணர்வுபூர்வமான பதிவேடுகள் அதனை ஒத்த வன்முறைகளுக்கு இட்டுச்செல்லும் உறுதியான சாத்தியப்பாடுகள் உள்ளன. உணர்வுகளைத் தூண்டுவதைத் தவிர்ப்போம். இதன்படி:

  - நடிப்பு மற்றும் துயரத்தை மிகைப்படுத்திய மனக்கிளர்ச்சி,

  - வரைபடங்கள் மற்றும் அகோரமான தகவல்களை மிகைப்படுத்துவதன் ஊடான அலங்கரிப்பு,

- பொருத்தப்பாடற்ற விபரங்களை மிகைப்படுத்துவதன் ஊடாக நியாயப்படுத்தல்,

- மரியாதைக் குறைவான சம்பாசனை,

- இட்டுக்கட்டல்களும் உட்செருகல்களும் நிகழ்வுகள் அல்லது மக்கள் அபிப்பிராயங்கள் பற்றிய தவறான எண்ணப்பாட்டை தோற்றுவிக்கிறது.

- பாலியலும் பாதிக்கப்பட்டவரை பாலியல்மயப்படுத்தலும்.

- வன்முறைகள், ஆயுத சண்டைகளும் தீவிரவாதச் செயற்பாடுகளும் அவர்களது செயற்பாட்டாளர்களதும் விடயங்களை கட்டுரைகள் மற்றும் நேர்காணல்கள் ஊடாக அலங்கரிப்பதிலிருந்தும் தவிர்ந்திருப்பதும் இன்றியமையாததாகும்.

- அபத்தங்கள், மக்கள் ரசனைக்குப் புறம்பான அல்லது தவறான ஊடகப் பதிவிடலிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கான தர நிர்ணயங்களை உயர் மட்டத்தில் பேணல்.

- பதிவேட்டின் ஆழத்தை உணர்த்தும் வகையில் மரபு ரீதியான சிந்தனைப் போக்குடனான ஆண்களதும் பெண்களதும் வாசிப்பு மூலங்கள் மற்றும் வரைபடங்களைத் தவிர்த்தல்

- மக்கள் பல்வகைப்பட்ட மனித இனம். ஆண்களையும் பெண்களையும் அவர்களது பால்நிலை வகிபாகம், வயது, தொடர்புத்தன்மை, மற்றும் குடும்ப விபரங்களுக்கு ஏற்ப அடையாளம் காண்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

- பாதிக்கப்பட்ட பெண்களையும் யுவதிகளையும் கண்டிக்கும் தார்மீக நிலையை எடுப்பதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல்.

## கல்வி சார்ந்தது

- கண்காணிப்பு முகவர்கள் (இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு/ஆசிரியர்கள் குழுமம்) ஊடகவியலாளர்களை பக்குவமான பொறுப்புமிக்கதும் ஒழுங்குநெறியுடனான (பால்நிலை உணர்தன்மை) பத்திரிகைப் பதிவேடு பற்றி மீள் பயிற்சிகளையும் பயிற்சிகளையும் வழங்குவதை உறுதிசெய்தல்.

- உரிய சட்டங்கள் மற்றும் ஊடக இடைவினைகள் பற்றி பொலிஸ் உத்தியோகத்தர்களை மீண்டும் பயிற்றுவித்தல்.

- அனைத்து மட்ட ஊடகவியலாளர் பயிற்சிநெறிகளில் பால்நிலை, ஒழுக்கநெறி, மற்றும் ஊடக பொறுப்புக்கள் எனும் தலைப்புக்களை உள்ளடக்குதல்.

## யார் கவனம் செலுத்துவது?

- அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்கள்
- பத்திரிகை நிறுவனங்களில் உரிமையாளர்கள்
- ஆசிரியர்களும் உப ஆசிரியர்களும்
- நீதிமன்ற நிருபர்கள் மாகாண மற்றும் பிராந்திய நிருபர்கள்
- தொழில் நிபுணத்துவக் குழாம் (ஆசிரியர்கள், நிருபர்கள், பத்திரிகை உரிமையாளர்கள்)
- ஊடகவியல் கற்கை ஆசிரியர்கள்
- ஊடக அமைச்சு
- சட்ட ஒழுங்கு அமைச்சு
- பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை
- பொலிஸ் விசாரணையாளர்கள்
- குற்றவியல் நிபுணர்கள்
- நீதிபதிகள்
- வழக்கறிஞர்கள்

## பத்திரிகைச் செய்தி பதிவிடல் பற்றிய சட்டங்களும் கொள்கைகளும்

- குற்றவியல் சட்டக் கோவை குறிறவியல் பாதிப்பாளர்கள் மற்றும் சாட்சியாளர்களுக்கு உதவுவதற்கும் பாதுகாப்பதற்குமான 2015 இன் 4 ஆம் இலக்க சட்டம்

- தொழில் முறையாளர்களுக்கான செயற்பாட்டுக் கோவை (ஒழுக்க நெறிக் கோவை) - இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் குழாம்.

- ஊடகவியலாளர் சட்ட விதிகளுக்கான ஒழுக்க நெறிக் கோவை - இலங்கை பத்திரிகையாளர் சபை.

- தகவல் அறியும் சட்டம்.

## பத்திரிகை பதிவேட்டுக்கான வழிகாட்டல்கள்

- குற்றவியல் நீதிச் செயன்முறையில் சிறுவர் பாதிப்பாளர்கள் மற்றும் சிறுவர் தொடர்பான தகவல்களைப் பதிவிடும் ஊடகவியலாளர்களுக்கான வழிகாட்டல். (சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை)

- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பை முகாமைசெய்வதற்கான தேசிய வழிகாட்டலில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய ஊடகப் பதிவிடல்: ஒரு பல் துறை அணுகுமுறை (ஊடகவியலாளர்களுக்கான கையேடு - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை)

- இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்திரிகை ஆசிரியர்கள் குழாமினால் தயாரிக்கப்பட்ட தொழில்முறை செயற்பாட்டுக் கோவை (ஒழுக்கநெறிக் கோவை)

## தொடர்புடைய எழுத்தாளர் மற்றும் முதன்மை ஆராய்ச்சியாளர்

பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே

## எழுத்தாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்

பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே | பேராசிரியர். மைத்ரீ விகிராமசிங்க்கே | பேராசிரியர். இந்திரா கித்துள்வத்தே | கலாநிதி. அனு'ா எதிரிசிங்கே | கலாநிதி. உதார செனரத்னே | கலாநிதி. ஹண்டுன் விஜேவர்த்தன | பேராசிரியர். எ. பதமேஸ்வரன் | கலாநிதி. பி. பரணிதரன் | கலாநிதி. அனிஸ்ரா விஜேநாயக்கே | கலாநிதி. நிர்மலா பெரேரா | பேராசிரியர். அஸ்வினி பெர்னாண்டோ | திருமதி. டிலினி சமளி வாலிசுந்தர

## தரவு சேகரிக்கும் மேற்பார்வையாளர் குழு (கணியத்தரவு பகுதியம்)

பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே | கலாநிதி. அனு'ா எதிரிசிங்கே | கலாநிதி. உதார செனரத்னே | கலாநிதி. ஹண்டுன் விஜேவர்த்தன

## தரவு சேகரிக்கும் மேற்பார்வையாளர் குழு (பண்பின தரவு பகுதியம்)

பேராசிரியர். மைத்ரீ விகிராமசிங்க்கே | கலாநிதி. அனு'ா எதிரிசிங்கே | பேராசிரியர். அனுருட்தி எதிரிசிங்கே | . உதார செனரத்னே | கலாநிதி. ஹண்டுன் விஜேவர்த்தன

## தரவு சேகரிக்கும் குழு

திரு சந்தரு ஜெய்ரட்னே | திரு. சுராஜ் ஜெயரத்ன | கலாநிதி பாபசார விஜயரத்னே | கலாநிதி. சஜினி ஹேரத், கலாநிதி பா'ாந்த ஜெயவீர | திருமதி சமிந்தி ஹேவாகமஹே | கலாநிதி. கஜமுகி தமிழ்வண்ணன் | திரு ே. தமிழ்வண்ணன | கலாநிதி. மலிந்த ஹேவகே | கலாநிதி. அமல்கா பத்மபெருமா | கலாநிதி. குமார சேனநாயக்க.

***'மக்களின் பிரச்சனைகள் மீதான ஓர் பார்வை'*** ஆனது
இலங்கையின் சமூக அபிவிருத்தி பிரச்சனைகள்
தொடர்பிலான கொள்கைச்சுருக்க
தொடர் ஆகும்.

**இலங்கை ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்**
பௌத்தாலோக மாவத்த,
கொழும்பு 07, இலங்கை

தொலைபேசி: +94 (011) 2580840

/unfpa.srilanka @unfpasrilanka @unfpasrilanka srilanka.unfpa.org